**EA.No.31/2025 in EP.No.3/2023 in RLTOP No.1/2020**

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 06 –ம் நாள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியின் எ.ம.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. குமார் (RW–1 ) | வயது | : | 53/2026 |
| க/த பெயர் | : | திரு. கண்ணன் | தொழில் | : | மெக்கானிக் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் அசல் வழக்கின் 1ம் எதிர்மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், தற்போது மனுதாரர் உரிமையாளர் என்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையே ஏற்பட்ட வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் வழக்கு ஏற்பட்டது என்றால் சரிதான்.
2) எனது தரப்பு கட்சியை கீழ் நீதிமன்றத்திலும், மேல்முறையீட்டிலும் நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தரப்பு கட்சியை கீழ் நீதிமன்றத்திலும், மேல்முறையீட்டிலும் நிராகரித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் என்னால் இந்த மனுவில் புதியதாக கட்சி செய்ய உரிமையில்லை என்றால் சரியல்ல.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 18:51:59 +0530

District Munsif

Mannargudi.